# ஆயிரத்தோன்

**(Prof. K. N. Sundaresan)**

நிறை மதிகள் ஆயிரத்தை நீ பிறந்த பொன் நாட் பின்
முறையாய் யாம் கணக்கிட்டு, விழா இன்று முனைகையிலே...

திறன் சோராக் கரம் நினது, ஆயிரக் கால் மண்டபம்போல்
நிறுத்திய ஓர் பெருவாழ்வே நின்னகத்துக் காண்பதாலே,
பறை சாற்றிப் பரவுகின்றொழம், “ஆயிரத்தோன் நீ” என்றே.

* * *

ஓவியத்தில் அங்கு அதோ
காவியத்தின் செங் கிண்ணம்!
ஆயிரம் இதழ் மலராம்...அழைக்கிறார் அத்தாமரையை

நிலைத்துள்ளாள் மலர்மேலே
உலகோம்பும் திரு ஆயின்,
ஆயிரமே மெல் இதழ்கள் பொன் மகளை எந்தொணுமோ?

*

வாசலிலே அங்கு அதோ
ஊசலாடும் புன் கிளைகள்!
ஆயிரம் காய்சியாம் அழைக்கிறார் அத்தென்னையையே;

குலை குலையாய் மதி தோறும்
குலுக்கிற்று அத் தரு ஆயின்
ஆயிரம் வன் காய்க்கும் அதிகமாக ஈந்திலதோ?

*

தெருவினிலே அங்கு அதோ
விரிந்துளது பொங்குவெயில்!
ஆயிரும் கதிரோனாம்... அழைக்கிறார் அவ் ஆதவனை;

காத நெடு வீடுகளுள்
சோதி ஏற்றும் அரு ஆயின்
ஆயிரம் கிரணங்கள் போதுமோ தான் காந்துதற்கே?

**அதனால்,**

ஆயிரம் எனினே எண் அதை மீறிய
நேயப் பற்பல நெருங்குமா தொகையே;

கமலமும் சூரியனும் தெங்கையும் ஒத்து நீ
நுமரிடை பொலிந்த நின் வள்ளல் வாழ்க்கை

நீளுக இன்னும், இனிது எம் நடுவே;
ஆளுக அடிமையாய் மதியிலிச் சந்திரனை;
நாளும் தளரற்க நலமும் ஊக்கமும்;

ஞான நல் நாட்டமும் அருளும் நிறைக,
ஊனத் துயர்கள் உறுத்துதல் ஓய்க,

விதப் பல சுற்றம் வேட்டு நிற் காக்கவும்
வதுவை நீ கொண்ட மனைமகள் மகிழவும்
இடர் எது சாரினும் தற்காப்பு உணர்ச்சியில்
ஒடுங்கி, வியன்சுருள் அரணிலே தூங்கும்
ஆயிரம் காலி அச் செங்கறு அட்டைபோல்,

ஆயிரம் திங்களொளி நின் முகம் குவிந்ததால்
பாயிர விளக்குமாய்ப் படர்க நின் நாளே.

* * * * *